# PRESS NOTE

The Accused Tr.S.V.Sivaprasad worked as Section Officer, (Now under suspension) at the office of the Institute of Distance Education, University of Madras, Chennai-5 from 24.12.1983 to 24.07.2009.

The defacto Complainant Tr.P.Dhanapalan, S/o Perumalpillai residing at No.1D, Thottakara Street, Mohanur, Namakal District had approached Tr.V.S.Sivaprasad on 22.07.2009 for the issuance of Provisional Certificate for B.Lit., course in the name of complainant's wife Tmt. S.Rajeswari wherein Tr.V.S.Sivaprasad demanded Rs.500/- to complete the work and further he asked Tr.Dhanapalan to come on 24.07.2009 with the bribe amount.

The complainant was unwilling to pay the bribe and he came to the V&AC office, Special Investigation Cell on 24.07.2009 at about 09.30 hrs and gave a written complaint. In this connection a case was registered by Vigilance and Anti-Corruption against the Accused Officer Tr.S.V.Sivaprasad.

In the Course of the same transaction on 24.07.2009 at about 12.45 hrs at the Centenary Building, University of Madras, Chennai the Accused Officer Tr.V.S.Sivaprasad, Section Officer by corrupt or illegal means and abusing his official position obtained the above said amount of Rs.500/- as pecuniary advantage from the defacto complainant Tr.Dhanapalan for himself. In this connection, the Accused was arrested and sent to Judicial Custody for the demand and acceptance of illegal gratification of Rs.500/- for the issuance of Provisional Certificate for B.Lit. course in the name of complainant's wife Tmt.S.Rajeswari.

The above said case was under trial at the Special Court, Chennai. Today (08.12.2023) the Special Court, Chennai delivered the judgment and accused officer Tr.S.V.Sivaprasad, formerly Section Officer was convicted for the offence committed u/s. 7 of Prevention of Corruption Act, 1988. The Accused Officer is sentenced to undergo Rigorous imprisonment for One year and shall pay a fine of Rs.1,000/- and in default to undergo simple imprisonment for 3 months and u/s.13(2) r/w.13(1)(d) of Prevention of Corruption Act, 1988 the Accused Officer is sentenced to undergo Rigorous imprisonment for Two years and shall pay a fine of Rs.1,000/- in default to undergo simple imprisonment for 3 months.

## பத்திரிக்கை செய்தி

## லஞ்சம் பெற்ற குற்றத்திற்கு தண்டனை பெற்ற சென்னை பல்கலைக்கழக முன்னாள் பிரிவு அலுவலர்

லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக தண்டனை பெற்றுள்ள திரு.S.V.சிவபிரசாத், என்பவர் சென்னை, சென்னை பல்கலைக்கழகம், தொலைதூரக் கல்வி நிறுவன அலுவலகத்தில் பிரிவு அலுவலகராக (தற்போது பணியிடை நீக்கம்) கடந்த 24.12.1983 முதல் 24.07.2009 வரை பணிபுரிந்து உள்ளார்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர், தோட்டக்கார தெரு, எண்.1டி என்ற முகவரியில் வசிக்கும் திரு.P.தனபாலன், த/பெ.பெருமாள்பிள்ளை என்பவர் சென்னை, சென்னை பல்கலைக்கழகம், தொலைதூரக் கல்வி நிறுவன அலுவலகத்தில் மேற்படி குற்றவாளி திரு.V.S.சிவபிரசாத் என்பவரை தனது மனைவி திருமதி.ராஜேஸ்வரின் பி.லிட் படிப்புக்கான புரவிசனல் சான்றிதழ் வேண்டி 22.07.2009 அன்று அணுகியுள்ளார். அதற்கு குற்றவாளி திரு.S.V.சிவபிரசாத், பி.லிட் படிப்புக்கான புரவிசனல் சான்றிதழ் வழங்க தனக்கு லஞ்சமாக ரூ.500/- கொடுத்தால் தான் புகார்தாரரின் மனைவி திருமதி.ராஜேஸ்வரின் பி.லிட் படிப்புக்கான புரவிசனல் சான்றிதழ் வழங்குவேன் என்று கூறியுள்ளார். மேலும், 24.07.2009 அன்று லஞ்ச பணம் ரூ.500/-த்துடன் தன்னை வந்து பார்க்கும் படி கூறியுள்ளார்.

புகார்தாரருக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாததால் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வுக்குழுவில் புகார் கொடுத்துள்ளார். அதன்பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வுக்குழு 24.07.2009 அன்று சுமார் 09.30 மணியளவில் வழக்கு பதிவு செய்து, பி.லிட்

படிப்புக்கான புரவிசனல் சான்றிதழ் வழங்க ரூ.500/- லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக திரு.S.V.சிவபிரசாத் அவர்களை கைது செய்து, புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த வழக்கானது, சென்னை ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்நிலையில், மேற்படி முன்னாள் வணிக உதவியாளர் திரு.S.V.சிவபிரசாத் மீது குற்றம் உறுதி செய்யப்பட்டு 08.12.2023 இன்று இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதில் குற்றம் சாட்டப்பட்ட சென்னை பல்கலைக்கழக முன்னாள் பிரிவு அலுவலர் திரு.S.V.சிவபிரசாத் அவர்களுக்கு சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act, 1988 கீழ் ஒரு ஆண்டு சிறைதண்டனையும், ரூபாய் ஆயிரம் அபராதமும் மற்றும் u/s.13(2) r/w.13(1)(d) of Prevention of Corruption Act, 1988 இரண்டு ஆண்டு சிறை தண்டனையும், ரூபாய் ஆயிரம் அபராதமும் ஏக காலத்தில் அனுபவிக்குமாறு தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.